ARYA DHARMAM REGD. No. M. 2913
TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 21
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்கிரம-வருஷ வைகாசி-மீ 3உ 1940-வருஷ மேமீ 16உ | ஸ-20

வாரக் குறிப்புகள்

ஸ்ரீவத்ஸ. வே. ஸோ. சர்மா

சர்சில் என்செய்வார் !! சேம்பர்லேனை விலக்கி சர்சிலை பிரிடிஷ் பிரதம மந்திரியாக்கியிருக்கிறது! ஜர்மனியுத்தத்தில் அவர் என்ன ஸாதிப்பார்? இந்தியாவை அணைப்பரா? என்பன அனுபவத்தில் தெரிய வேண்டும்!

பேயர் சண்டைவேண்டாம்!! சென்னை நகரஸபையில் தெரு தோட்டம் பாலம் முதலியவைக்களுக்கு காங்கரஸார் தலைவர் பெயரையே வைக்கமுயல்வது பிற்போக்கராவரும் அங்ஙனம் செய்ய வழிகாட்டியாகிறது. ஸ்வராஜ்யம் வரும் வரையாவது இதை நிறுத்தினால் நலம்!! அற்பசண்டை ஒழிக!

பொருமை வேண்டாம்!! சிலபிராமணேதரர்கள் பிராமணரது பெருமையைக்கண்டு சகியாமல் காந்தாரி கார்யம் செய்கின்றனர். மேயர் ஸ்ரீ ஸத்ய மூர்த்தியினது தியாகத்திற்கும் ஸாமர்த்யத்திற்கும் சிறிதுகூட தக்கஸன்மானத்தை அவருக்களிக்கவில்லை சிலர்சேகவலவகையில் அவரைத்தாக்குவதும் அவரிடம் தோஷந்தேடுவதும் அழகல்ல! நகரஸபையில் பொருமையால் பலர் பேசுவது அஸஹ்யமாயிருக்கிறது.

பண்டிதஸபைவாழி!! அம்பாஸமுத்ரத்தில் பண்டிதர்கள்ஸபை நடக்கிறது. அதுபல்வகை பாஷாபண்டிதஸபையாதலின் அங்கு தர்மாபிவிருத்தியை எதிர் பார்க்க முடியாது! பரஸ்பரபகமையைவிட்டு ஒற்றுமையுடன் பண்டிதபதவிபண்டிதர்களுக்கே அளித்தல் வேண்டும். இதிலும் எல். டி. புகலாகாதென தீர்மாநம் செய்வாரா?

ஸிந்துவில் யோகபாடம்!! கலாசாலைகளில் தேஹப்பயிற்சிக்காக யோகாப்யாஸம் ஸிந்து அரசாங்கத்தவரால் போதிக்கப்படுகிறது! இதன்றோ தேசீயம்? தலைமுதல் எல்லாவற்றிலும் அன்னிய நாகரிகத்திற்கே அடிமையான இதரதலைவர், விசேஷமாக சென்னை தலைவர்கள் கவனிப்பரா?

நல்லறிவு பூட்டினர்! பஞ்சமரை உள்ளே விடுவதானால் தான் ஹோடல்களுக்கு லைஸென்ஸ் கொடுப்பது என்ற கொள்கையை பாம்பே நகரஸபை கமிஷனர் "இந்த வேலை நம்மைச் சேர்ந்ததல்ல! சுகாதரமே கவனிக்கத்தக்கதென கூறி கண்டித்தார். நம் நாட்டு மேதாவிகளிதைக் கவனிக்கட்டும்!

கை மேல் கூலியா? ஸ்ரீரங்கம் ஆலயப்ரவேச வீரரில் ஒருவர் தேவாலய நகையை அபஹரித்து போலீஸாரால் கைது செய்து ஜாமீனில் விடப்பட்டதாக ஓர் பத்ரிகை கூறுகிறது. இது ஸத்யமானல் ஆச்சர்யப் படுவதற்கில்லை!

பெல்ஜியம் தக்குமா? இதுவரை நடுநிலையிலிருந்த அதற்குமாபத்து வந்துவிட்டதா? புதுமந்திரிகள் ஸேனை அனுப்புவதாக தெரிகிறது!! ஹிட்லரோ வீரகோஷம் செய்து போர் முனையில் நிற்கிறர்! என்னுமோ!

திருவடைமருதூர் ஸ்ரீ சங்கரஜயந்தி!! ஸ்ரீ மதாசார்ய கருணைக்குப் பூர்ணபாத்ரமாகி [illegible] தர்மத்திற்கே உழைக்கும் ஸ்ரீமான். குப்புஸ்வாமி அய்யரவர்கள் முயற்சியால் காலை வேதபாராயண பூஜாதிகளுடன் மாலை உபன்யாஸம் உயர்ந்த ஸங்கீதகச்சேரி அற்புதமான ஊர்வலம் முதலியன ப்ரதிதிநம் நடக்கிறது. இத்தகைய வைபவத்தை நான் வேறெங்கும் கண்டதில்லை!

தலைவர்கள் மஹாநாடு கூட்டும் யோஜனை.

கவர்ன்மெண்ட் ஆதரவு.

காந்திஜியின் பதில்

இந்திய ராஜீய நெருக்கடியைத் தீர்க்க ஸமீபத்தில் சில யோஜனைகள் கிளம்பின. பெரிய அரசியல் நிர்ணய ஸபைக்குப் பதிலாக இந்திய ராஜீயத் தலைவர்களின் கூட்டமொன்றை நடத்த பிரிட்டிஷ் பத்திரிகை யோஜனை கூறியதும், அதை காந்திஜீ ஒருவாறு ஆதரித்ததும் தெரிந்த விஷயம்.

இதன் மேல் மேற்படி மஹாநாட்டை நடத்த கவர்ன்மெண்டார் இணங்குவார்களாவென்று பார்லிமெண்டில் கேட்கப்பட்ட கேள்விக்கு இந்தியா மந்திரியின் உதவியாளர் மே மீ 2உ பதில் கூறுகையில், அத்தகைய முயற்சி செய்யவேண்டியது ராஜீயத் தலைவர்களின் வேலையென்றும், அப்படிச் செய்தால் வைஸ்ராய் அதற்கு வேண்டிய உதவி செய்யத் தயாராயிருப்பதாயும் சொன்னர்.

காந்திஜீ அதற்கு பதில் சொல்லுகையில் ஸர்க்காருக்கே தான் அத்தகைய ஸமாதான முயற்சியில் இறங்க முதல் பாத்யமிருப்பதாயும் சுய நிர்ணயக் கொள்கையை ஒப்புக்கொண்டு, நியாயமான முறையில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டால் தலைவர்கள் மஹாநாடு கூட்டுவதில் தமக்கு ஆக்ஷேபமில்லையென்று வெளியிட்டிருக்கிறார்.

பிரிடிஷ் புதிய மந்திரிஸபை.

சர்ச்சில் பிரதம மந்திரி

நார்வேதோல்வி விஷயமாக பார்லிமெண்டில் சேம்பர்லினுக்குக் கிடைத்த வோட்டுக்களைக் கொண்டு கவனிக்கையில் அவரிடம் மெம்பர்களுக்கு நம்பிக்கைக் குறை இருப்பதாக வெளியாகியது.

அதன் பேரில் செம்பர்லேன் பிரதம மந்திரி பதவியை ராஜிநாமா செய்தார். மிஸ்டர் சர்ச்சில் பிரதம மந்திரியாக ஆனர். அமைத்துள்ள புதிய மந்திரி ஸபையில் தொழில், லிபரல் கக்ஷி மெம்பர்களும் இடம் பெற்று இருக்கிறார்கள். சேம்பர்லேனுக்கும் மந்திரி பதவி அளிக்கப்பட்டிருக்கிறது.

லார்டு ஹாலிபாக்ஸ் (இர்வின்) எப்போதும்போல் அந்நிய நாட்டு மந்திரியாயிருப்பார்.

ஜர்மனியின் புதிய படையெடுப்பு

ஹாலந்து. பெல்ஜியத்தின் மீது பாய்ச்சல்

ஜர்மனியானது நார்வே போராட்டத்திலிருந்து திரும்பி பெல்ஜியம், ஹாலந்து ஆகிய தேசங்கள் மீது படையெடுத்து விட்டது. நடு நிலைமைக் கொள்கையைக் காப்பாற்றிக் கொடுக்கும் நோக்கத்துடனேயே இந்தப் படையெடுப்பு ஆரம்பிக்கப்பட்டதாயும், பிரான்ஸும், இங்கிலாந்தும் மேற்படி தேசங்கள் வழியாக ஜர்மனிமீது படையெடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதைத் தடுப்பதுமே இந்தப்படையெடுப்பின் உத்தேசமென்றும் ஹிட்லர் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

நேச தேசங்களும் பெல்ஜியத்திலும், ஹாலந்திலும் தங்கள் சேனைகளை ஏராளமாக குவித்து வருகின்றனர்.

இங்கிலாந்தே மேலானது

காங்கிரஸ் தலைவர் போற்றுகிறார்

ஸ்ரீமான் ராஜேந்திர பிரஸாத் தற்கால யுத்த நிலைமையைப்பற்றி 16உ அபிப்பிராயம் வெளியிடுகையில் "ஸர்வாதிகார நாடுகளைவிட இங்கிலாந்தே எக்காலத்திலும் மேன்மையானதென்பது எனக்குத் தெரியும். ஆகவே நான் இந்த யுத்தத்தில் இங்கிலாந்தும் பிரான்ஸும் வெற்றியடைய வேண்டுமென்று கோருகிறேன்,, என்றுசொல்லியிருப்பதுகவனிக்கத்தக்கது.

ஜின்ணா கூறும் இந்தியா பிரிவினை

கும்பகோணம் நகர வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க காரியதரிசி ஆர். நடராஜன் எழுதுகிறார்

துரதிரிஷ்ட வசத்தால் இந்தியா தேசம் சமீபகாலத்தில் பல வருஷங்களாக காந்தி வலையில் சிக்கிநிற்கிறது. அதற்கு சளையாத ஜின்ணா அவர்களும் தேச நலத்தைக் கருது பவர்களின் ஆதரவுக்குத் தகுதியற்ற இந்தியப்பிரிவினையாகிய உன்மத்தயோசனையை தொடுத்து விட்டிருக்கிறார்.

ஆனால், யோக்யமானவர்களின் ஆலோசனைக்கு லாயக்கில்லாத விஷயங்கள் கூட இந்தியா தேசத்தின் துர்பாக்கிய நிலைமையில் விசேஷ முக்யத்வத்தைப் பெற்று விடுகின்றன.

ஜின்ணா அவர்களின் வாதமானது சரியான காரணங்களைக் கொண்டதுபோல கற்பிதம் செய்யப்பட்டிருக்கிறது. பிறர் அனுசரித்து சொல்லமுடியாத இந்த காரணங்கள் எவை?

முஸ்லீம்கள் இந்தியாவின் பல பாகங்களில் மைனாரிடி வகுப்பினராக இருப்பதால் அவர்களுடைய விருப்பங்களை பூர்த்தி செய்வவதற்காக முஸ்லீம்களை மெஜாரிடியாக காண்பிவிக்கும் அசாதாரண முறையில் இந்தியா பிரிவினை செய்யப்படவேண்டுமென்பதே.

அவ்விதம் செய்வதாயின் ஜின்ணாகூறும் பிரிவினை முறையை ஒதுக்கிவிட்டு, பாரபக்ஷமின்றி இந்தியாவிலுள்ள எல்லா மைனாரிடி கக்ஷிகளையும் (அதனதன் அபிலாஷைகளை ரக்ஷித்துக்கொள்வதற்காக) மெஜாரிடி வகுப்பாக காட்டும் ரீதியில் புதியதோர் முறையில் ஏன் இந்தியா பிரிவினை செய்யப்படக்கூடாது? முஸ்லீம் மைனாரிடித்தன்மையை ஜின்ணாவின் இந்திய பிரிவினைதிட்டத்தால் மெஜாரிடியாக மாற்றுறுவது சாத்தியமானால், வெறிபிடித்த அந்தப் பிரிவினை முறையைப் பின்பற்றி முஸ்லீம்களல்லாத மைனாரிடி வகுப்பினர்களையும் ஏன் மெஜாரிடிகளாக மாற்றிவிடலாகாது?

பதினாலு லக்ஷியங்களைக் கொண்டிருந்த ஜின்ணா அவர்கள் நாள்கள் செல்லச் செல்ல, லீக் லக்ஷியங்களின் எண்ணிக்கையை பெருக்கி வருகிறார். ஹிந்து முஸ்லீம்களுக் கிடையேயுள்ள ஆப்பின் சரிதத்தைக்கவனித்தால் சாதாரண ஆரம்பத்திலிருந்து ஜின்ணாவின் யுக்த மற்ற கோரிக்கைகள் ஒவ்வொன்றாக அதிகரித்து இந்தியப் பிரிவினையில் வந்து சேர்ந்திருக்கிறது.

சச்சரவு, அவநம்பிக்கைகளாகிய செடி தனித்தொகுதி புகுத்தப்பட்ட காலத்தில் ஊன்றப்பட்டது. தனித்தொகுதி முறை ஜனநாயக மின்மையை (ஜனநாயக அபாவத்தை) பூர்ணமாக குறிப்பிடுகிறது. இந்த தெளிவான தத்வத்தை அறியாதவர்கள் கண் இருந்தும் குருடர்களே. ஒரு அரசியலில் மெஜாரிடி அபிப்பிராயம் தலையெடுக்க அனுமதிக்கப் படாவிட்டால் எந்த நியாயம் அல்லது சாக்கு போக்குகளினாலும் அதை ஜனநாயக அரசியல் என்று சாதிக்க முடியாது.

ஹிந்துக்கள் மெஜாரிடியாக இருக்கிறார்கள் என்பதற்காகவே, முஸ்லீம்களின் கோரிக்கைகளை எல்லாம் பூர்த்திசெய்ய வேண்டிய அவச்யம் ஏற்படுமானால், ஒரே வகுப்பைச் சேர்ந்த பலகக்ஷிகளுள் ஒரு மைனாரிடி கக்ஷியின் உரிமைகள் அதே வகுப்பைச் சேர்ந்த இதர மெஜாரிடி கக்ஷிகளின் ஆக்கிரமிப்புகளிலிருந்து ரக்ஷிக்கப்பட வேண்டியது நியாயமில்லையா?

தொழிற்கக்ஷியும், லிபரல்கக்ஷியும் கன்ஸர்வேடிவ் மெஜாரிடி அபிப்பிராயத்துக்கு வணங்குமானால், ஜனநாயகத்தில் முஸ்லீம் மெஜாரிடி அபிப்பிராயத்திற்கு ஹிந்துக்களும், ஹிந்துமெஜாரிடி அபிப்பிராயத்திற்கு முஸ்லீம்களும் கட்டுப்படவேண்டியதுதான். தனிஉரிமைகளைப் பாதுகாப்பதென்ற வாதத்திற்கு ஜனநாயகத்தில் அறவே இடம் கிடையாது.

அதிரிஷ்டம் வாய்க்கப்பெறாத இந்தியா ஒரு சச்சரவிலிருந்து பலசச்சரவுகளுக்கு ஆஸ்பதமாக பரிணாமம் அடைந்து வருகிறது. இந்தசமயம் அரசாங்கத்தார் செய்ய வேண்டிய ஸ்பஷ்டமான கடமை இது:— ஜனநாயக முறையானது மைனாரிடி உரிமைகளை பிரத்தியக்ஷமாக அவமதிப்பதாகவும், மெஜாரிடி கொள்கைகளை அக்கிரமமாகத் திணிப்பதாகவுமிருப்பதால், அரசாங்கத்தார் அதை தர்மமான அரிசியல் முறையாக அங்கீகரிக்க மறுக்கவேண்டும். அல்லது ஜனநாயக அரசியலை, தனித் தொகுதிகள், விசேஷ உரிமைகள் என்பதாகிய எந்தகட்டுக்கும் உட்படுத்தாமல் விளைவு நன்மையாக இருந்தாலும் கெடுதலாக இருந்தாலும் சுதந்தரமாக வேலை செய்ய விட்டுவிட வேண்டும். இதே சமயத்தில் அரசாங்கத்தார் பரஸ்பரம் விரோதம் கொண்ட கக்ஷிகள் ஒன்றுக்கொன்று முறண்படும் உரிமைகள் இவை சம்பந்தமாக பார பக்ஷமற்ற நடுநிலைமையில் நின்று ஒவ்வொரு கக்ஷியும் தன்மேல் சுமற்றப்படும் அபவாதங்களை மறுக்க அவகாசமளித்து, அது சம்பந்தமான விமரிசனங்களை விசாலமனதுடன் வரவேற்கவேண்டும். இந்தியாவில் பூர்ண சமுதாயம் அல்லாத தனி வகுப்பு, பிரிவு கக்ஷி இவைகளுடைய எந்த உரிமை அல்லது அபிலாஷைகளைப்பற்றிய பிரச்னைகளிலும் அரசாங்கத்கத்தார் ஒரு சார்பாக சிரத்தை கொள்ளக் கூடாது. கக்ஷிகளின் நியாய அநியாயங்களையும், தர்மா தர்ம உரிமைகளையும் நியாயஸ்தலங்கள் பூர்ண சுயேச்சையுடன் விசாரணை செய்து முடிவு கூறவேண்டும்.

மனிதனின் பைத்யக்கார சுபாவம் தன்னை உலகின் கர்த்தாவாகவும் அதிபதியாகவும் எண்ணச்செய்கிறது. ஆனால் தனக்குக் கூட மனிதன் கர்த்தாவாக இல்லை. இவ்வாறு மனிதனின் யோசனைகள் காற்றில் கரைந்துங்கூட, அவன் ஆகாய கோட்டைகளை கட்டுபவனாகவே இருந்து வருகிறான்.

உலக முழுவதும் உள்ள முஸ்லீம்கள் ஒரு ராஜ்யத்தொடர்புள்ளவர்கள். ஒரே ஜாதி வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. (The Muslims all the world over constitute one nation) அவர்கள் ஒரு ராஜ்யத் தொடர்புள்ளவர்களாக இருப்பார்களானால் அவர்களுக்காக இந்தியாவை பிரிவினை செய்யவேண்டிய அவச்யமில்லை. அவர்கள் ஒரே தொடர்புள்ள தேசத்தினர், ஒரு தொடர்ச்சியுள்ள ஜாதி அல்லது வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பது பொய் வாதமானால் அவர்களுடைய பாத்யதையை நழுவ விடவேண்டியது தான்.

இஜிப்டு, துர்க்கி, அரேபியா, பர்ஸியா, ஆப்கானிஸ்தான் இந்த வெவ்வேறான தேசங்களின் அமைப்பே முஸ்லீம்கள் உலகில் எந்த பாகத்தில் இருந்தாலும் ஒரு தேசத் தொடர்பினர் ஆகார் என்பதை பிரக்டனப் படுத்துகின்றன. ஒரு இஜிப்திய முஸ்லீமை துர்க்கியிலும், அரேபியாவிலும், பர்ஸியாவிலும், ஆப்கானிஸ்தானத்திலும் முறையே துருக்கி தேசத்தினராகவோ, அரேபியராகவோ, பர்ஸியராகவோ, ஆப்கானியராகவோ அழைப்பது சாத்தியமில்லை.

அதேபோல் ஒவ்வொரு தேசத்திலும் தாற்காலிகமாக சில நூறு வருஷங்களாக வஸித்துவரும் எந்த முஸ்லீமையும் அந்தந்த தேசத்தின் பூர்வகாலமிருந்து அனாதியாக தொடர்ந்து வந்திருக்கும் நிரந்தரமான பிரஜைகளில் ஒருவராக செய்து விடமுடியாது ஆகையால் முஸ்லீம்களுக்கென்று இந்தியாவைத் துண்டாடி பாகம் பிரித்துக்கொடுக்க வேண்டுமென்ற முஸ்லீம்லீகின் ஞானோதயமானது ஆதரவுக்கு அர்ஹதையற்றது என்பது தெளிவு இந்திய முஸ்லீம்கள், சுயேச்சை வாய்ந்த இதர முஸ்லீம் தேசத்தினர்களின் திருஷ்டியில் லக்ஷ்யம் செய்யப்படவில்லை. இதற்கு இந்திய முஸ்லீம்களின் கிலாபத்கிளர்ச்சியே அத்தாக்ஷி. இந்தநிலைமையில் ஜின்ணா அவர்களும் முஸ்லீம்லீகும், இந்திய முஸ்லீம்கள் உலகமுஸ்லீம்களிடமிருந்து பிரிக்கப்படக்கூடாத தொடர்புள்ள ஏகத்வத்தை (ஒருமையை) கல்பிதம் செய்து கொண்டு, இந்தியாவை பிரிவினை செய்து கொடுக்கவேண்டுமென்று சொல்லும் வாதமானது தத்வதிருஷ்டியில் பரிஹாஸத்திற்கு ஆஸ்பதமாக இருக்கிறது.

இந்த காரணங்களால் முஸ்லீம் லீகினரின் இந்திய பிரிவினை கோரிக்கையும் இதுபோன்ற ஜஸ்டிஸ் கக்ஷியினரின் தமிழ்நாடு பிரிவினை, பஞ்சாப் அஸெம்பளியைச் சேர்ந்த ஸ்ரீ மூலாஸிங் எம். எல். ஏ. ஜுகல்கிஷோர் எம். எல். ஏ; பகீர்சந்த் எம். எல். ஏ! ஹர்னம்தாஸ் எம். எல் .ஏ. இவர்களால் கோரப்படும் அச்யுத்ஸ்தான் என்ற பெயருடன் கூடிய பிரதேசப்பிரிவினை, இவ்வாறாக இந்தியாவை பலதுண்டுகளாக செய்யும் கோரிக்கைகளுக்கு அரசாங்கத்தார் இடமளிக்கலாகாது.

முஸ்லீம்லீக், ஜஸ்டிஸ்கக்ஷி, தாழ்ந்தவகுப்பினரில் ஒரு சாரார் இவர்கள் இந்தியாவை பலபிரதேசங்களாக துண்டாடுவதற்காக செய்யும் கிளர்ச்சிகள் இந்தியாவின் க்ஷேமத்திற்கு உகந்ததல்ல.

டாக்டர் நடராஜ சாஸ்திரீ
ஆயுர்வேதாசார்ய அவர்களின்

பயஸ்யா

பால் கொடுக்கும் ஸ்திரீகளுக்கு ஓர்
வரப்பிரஸாதம் போன்றது.

1 பாட்டில் விலை ரூ. 2—4—0

'ஆர்யதர்மம்' வாசகர்களுக்கு 5% தள்ளுபடி.

"ஆத்ரேய"
ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர் ரோடு, திருச்சினாப்பள்ளி.

ஸ்ரீ லலிதா
ஸஹஸ்ரநாமம்

நாகரலிபியில் மூலமும்,
நாமாவளியும். விலை அணா 0—5—0
ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு
விலை அணா 0—4—0.
தபால் சிலவு அணா 1

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க பிரசார கோஷ்டி.

செட்டி நாட்டில் பலவிடங்களில் பிரசாரம்.

எங்கும் விசேஷ ஆதரவு.

அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத் தலைவர்கள் ஸ்ரீமான் ராவ்சாகிப் என். நடேச அய்யர் அவர்கள் தலைமையில் மதுரை டவுன் வர்ணாச்ரம சுயராஜ்ய சங்க அத்யக்ஷகர் ஸ்ரீமான் என். ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள், மதராஸ் டி. எஸ். ராமசாமி அய்யர் அவர்கள், என். சீனிவாச அய்யர் அவர்கள், ஸ்ரீசெல்லையா பிள்ளை மற்றும் சனாதன வித்யாலய மாணவ மாணவிகள் ஆகியோர் மதுரை டவுன் சங்கத்தின் சார்பிலும் ஆதரவிலும் ஓர் பிரசார கோஷ்டியாக மதுரையை விட்டு 5--5--40 தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 1-30 மணிக்கு புறப்பட்டு ராமனாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த திருப்பணிச் செல்வர்கள் நிறைந்த செட்டிமார் நாடுகளில் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

கோவிலூர்

5—5—40உ ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30 மணிக்கு கோவிலூர் வந்து சேர்ந்தார்கள். அங்குள்ள வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தார்களும் அங்குள்ள மஹா ஜனங்களும் வேதகோஷ்டிகளுடனும் பூர்ணகும்பத்துடனும் பிரும்மஸ்ரீ ராவ்சாகிப் என். நடேசய்யர் அவர்களையும் மற்ற தலைவர்களையும் வரவேற்பு செய்து ஊர்வலமாக அழைத்துக்கொண்டு போனார்கள். கோவிலூர் பாடசாலை முன்பாக ஓர் மாபெரும் கூட்டம் நடைபெற்றது. சே. வு. ஸ்ரீமெய்யப்ப செட்டியார் அவர்கள் ராவ்சாகிப் என். நடேசய்யர் அவர்களை தலைமை வகிக்கும்படி பிரேரேபித்தார்கள்.

அய்யர் அவர்கள், ஸ்ரீ டி. எஸ். ராமசாமி அய்யர் அவர்கள், என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார், செல்லையா பிள்ளை, சௌரிராஜ பட்டாசாரியார் அவர்கள் ஆகியோர் மாஜிகாங்கிரஸ் மந்திரிமார்களால் செய்துள்ள ஆலயப்பிரவேச்சட்டத்தை கண்டித்து மதுரையில் நடந்து வருகிற ஓ. எஸ். 48-39 ஸூட்விஷயமாயும் பேசினார்கள். அதுகூட நமது சங்கத்தை மேன்மையாக பாராட்டியும் பேசினார்கள். கடைசியாக ஸ்ரீ மான் அய்யர் அவர்கள் வருகிற எம். எல். ஏ. எம். எல். சீ. எலக்ஷனில் நாம் எந்தகக்ஷிகாரர்களுக்கு ஓட் உரிமை யளிக்கவேண்டும் என்றும் நாம் இனிமேல் என்ன செய்ய வேண்டும் என்றும், எல்லா ஆஸ்திகமகாஜனங்களும் ஸ்வதர்மத்தோடு கூடிய ஸ்வராஜ்யம் அடைய பாடுபட வேண்டும் என்றும் மிக தெளிவாக பேசினார்கள். ஸ்ரீமான் டி. பி. ஜெகதீச அய்யர் அவர்களால் தலைவர் அவர்கள் ஸ்ரீமான் ராவ்சாகிப் என். நடேசய்யர் அவர்களுக்கு கோவிலூர் வர்ணாச்ரம சுயராஜ்யசங்கத்தின் சார்பிலும், தார்மிக யுவக் சங்க சார்பிலும், வித்யாசாலை மாணவர்கள் சார்பிலும் ஓர் உபசார பத்திரத்துடன் வந்தனோபசாரம் கூறபெற்றது. கூட்டம் சுமார் 500-க்கு மேலிருந்தது.

காரைக்குடி

கோவிலூரிலிருந்து மாலை 7 மணிக்கு புறப்பட்டு 7-30 மணிக்கு காரைக்குடிக்கு வந்து சேர்ந்தார்கள். காரைக்குடி வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க ஜில்லா சபை சார்பில் உசேன் ஆர்ச்லிருந்து பாண்டு, மேளங்களுடனும், பூர்ண கும்பங்களுடனும் வரவேற்பு செய்து ஸ்ரீமான்கள் நடேசய்யர் அவர்களையும், டி. எஸ். ராமஸ்வாமி அய்யர், என். சீனிவாச அய்யர், திருபுகழ் செல்லையா பிள்ளை, மதுரை டவுன் வ. சு. சங்கத் தலைவர் என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களையும் பூமாலைகள் போட்டு அலங்கரித்த மோட்டார் கார்களில் உட்கார வைத்து ஊர்வலமாக ஜெய கோஷத்துடன் அழைத்துக்கொண்டு கல்லுகட்டி வழியாக சிவன் கோவில் தெரு மேல வீதி குருபூஜை மடத்துக்கு முன் அழைத்து வந்து சேர்ந்தார்கள்.

இரவு 8 மணிக்கு ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஊர்வலம் வரும்பொழுது சுமார் 1000 ஜனங்கள் கூட வந்தார்கள். ஆத்தங்குடி எஸ். வி. ஆர். ஸ்ரீ கதிரேசன் செட்டியார் அவர்கள் பிர்ம்மஸ்ரீ என். நடேசய்யர் அவர்களை தலைமை வகிக்கும்படி பிரேரேரிபித்து மேற்படியார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ டி. எஸ். ராமசாமி அய்யர், என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார், டி. பி. ஜெகதீச அய்யர் ஆகியோர் காங்கிரஸ்காரர்களால் மதுரையில் நடைபெற்ற திருட்டுத்தன ஆலயப்பிரவேசத்தைப்பற்றியும், அதற்காக செய்யப்பட்ட சட்டத்தையும் எதிர்த்து பேசினார்கள். இரவு 11-30 மணிக்கு கூட்டம் கலைக்கப்பட்டது.

மறுநாளும் அதே இடத்திலேயே மேற்படி தலைவர் தலைமையில் 8 மணிக்கு கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீ டி. எஸ். ராம்சாமி அய்யர் அவர்கள், மதத்தையும் சமூகத்தையும் கேவலமாக காண்பித்து வருகிற சினிமா படங்களைப்பற்றியும் சென்ஸார் போர்டார் அவர்கள் அப்படிபட்ட படங்களை காட்ட அனுமதிக்க கூடாதென்றும் இனிமேல் அப்படிப்பட்ட படங்களை நாம் பார்க்கக்கூடாதென்றும் பேசினார். முக்யமாக தற்காலத்தில் காட்டப்பட்டு வருகிற அரோரா பிலிம் கம்பெனியாரால் தயாரித்து இருக்கும் ஸ்ரீ சங்கராசாரியார் என்ற படத்தின் விஷயமாயும் அந்த படத்தை காட்டவொட்டாமல் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் பேசினார்கள்.

கடைசியாக 10 மணிக்கு கூட்டம் கலைக்கப்பட்டது. அப்பொழுது சே. வு. ஸ்ரீ மெய்யப்ப செட்டியார் அவர்கள் காரைக்குடி ஜில்லா வ. சு. சங்கத்தின் சார்பில் வந்தனோபசாரம் கூறினார். இத்துடன் 6—5—40 மாலை 5 மணிக்கு வேத பாடக சாலையில் ஓர் ஸ்திரீகள் பொதுகூட்டம் நடைபெற்றது. அது என். ஆர். கே. பொன்னம்மாள் தலைமையில் நடைபெற்றது. அங்கு ஓர் ஆஸ்திக ஹிந்து மாதர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. உடனே அங்கு 50 ஆஸ்திக ஸ்திரீகள் அங்கத்தினர்களாக சேர்ந்தார்கள்.

நாக நாதபுரம்

இரவு 7-மணிக்கு திங்கள் கிழமை 6—5—40-ம் தேதி வாலிபர் சங்கத்தின் சார்ப்பில் ஓர் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் கோவிலூர் தார்மிகயுவச் சங்க காரியதரிசி கே. எ. ராமசாமி அய்யர் ஸ்ரீமான் என். நடேச அய்யர் அவர்களை தலைமை வகிக்கும்படி பிரேரேபித்து கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. டி. எஸ் ராமஸ்வாமி அய்யர் அவர்கள் வாலிபர்களுக்கு நல்லபுத்திமதிகளை சொற்பொழிவு செய்தார். கடைசியாக என். ஆர் கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள் நாக நாதபுரத்திலும் மாதர் சங்கம் ஒன்று, ஸனாதன தர்ம வித்யாலயம் ஒன்றும் அமைக்கப்பட வேண்டும் என்றும் அதனால் நாம் அடையும் பலன் என்ன வென்பது பற்றியும் பேசினார்கள். பாஷ்யம், சரஸ்வதி என்ற 2 சிறுவர் சிறுமிகள் அட்டூழிய ஆலயப்பிரவேசம் சாரதாசட்டம் என்பதை கண்டித்தும் அதோடு அதை அடியோடு ஒழித்து விட வேண்டும் என்றும் பேசினார்கள். காரைக்குடி சை. வு. ஸ்ரீ மெய்யப்ப செட்டியார் அவர்கள் நாக நாதபுரம் தார்மிகயுவச் சங்க சார்பில் வந்தனோபசாரம் கூறினார். அங்கு சுமார் 150 பேர்கள் குழுமி இருந்தார்கள். 8-மணிக்கு கூட்டம் கலைக்கப்பட்டது.

ஆத்தங்குடி

(7—5—40) தேதி சுமார் 3-மணிக்கு ஆத்தன்குடி வர்ணாசரம சுயராஜ்ய சங்கத்தின் சார்பில் ஆத்தங்குடி எஸ். வி. ஆர். ஸ்ரீ கதிரேசன் செட்டியார் அவர்கள் பிரேரேத்து ஸ்ரீ டி. எஸ். ராமஸ்வாமி அய்யர் அவர்கள் தலைமையில் ஓர் கூட்டம் வேதபாடசாலையில் நடைபெற்றது. ஸ்ரீமான் என் ஆர். கிருஷணஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீமான் ராவ்சாகிப் என். நடேசய்யர் அவர்கள் பேசினார்கள். சுமார் 200 பேர்கள் கூடி இருந்தார்கள். ஆத்தன்குடி வ. சு. சங்க காரியதரிசி அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பெற்றது. மாலை 5-மணிக்கு கூட்டம் கலைக்கப்பட்டது.

குன்றக்குடி

(7—5—40) தேதி மாலை 5-மணிக்கு ஆத்தங்குடியை விட்டு புறப்பட்டு 5-30 மணிக்கு குன்றக்குடிக்கு வந்து சேர்ந்தார்கள். அங்குள்ள ஆஸ்திகர்கள் எல்லோரும் சேர்ந்து பூர்ணகும்பத்துடனும், மேளவாத்தியங்களுடனும் யானை. மற்றவிருதுகளுடன் வரவேற்றினார்கள் குன்றக்குடி ஸ்ரீமான் கே. என். சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் பிரம்மஸ்ரீ என். நடேசய்யர் அவர்களை தலைமைவகிக்கும்படி பிரேரேபித்து தலைவர் அய்யர் அவரகள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது ஸ்ரீ டி. எஸ். ராமஸ்வாமி அய்யர், என். ஆர் கிருஷ்ணசாமி அய்யங்கார், பாஷ்யம் எம். ஸ்ரீ செல்லையா பிள்ளை, ஆகியோர் ஆலயவழிபாடுகளை பற்றியும் அதை மீறி நடந்த ஆலயப்பிரவேசச் சட்டத்தையும் எதிர்த்து பேசினார்கள். இதோடுகூட ஸ்ரீமான் என். நடேசய்யர் அவர்கள் ஆலயப்பிரவேசம் செய்ததினால் காங்கிரஸ் கொள்கைகளை மீறி நடந்த மாஜி மந்திரிகளும் மற்றுமுள்ள அவர்கள் வர்க்கத்தாரும் அடைந்த கதி என்ன என்பதை பற்றி பேசியதுடன் 52 வருடகாலமாக வளர்ந்து வந்த காங்கிரஸானது எப்படிபட்ட நிலமைக்கு வந்துவிட்டது என்பதை பற்றியும் பேசினார். சுமார் 500 ஜனங்கள் கூடியிருந்தார்கள். ஸ்ரீமான் கே. என். சுப்பரமணிய சாஸ்திரிகள், அய்யர் அவர்களுக்கு வந்தனோபசாரம் அளித்தார். சுமார் 6-30-மணிக்கு கூட்டம் சனாதனதர்மத்திற்கு ஜே, என். நடேச அய்யருக்கு ஜே, வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்திற்கு ஜே, என்ற ஜெயகோஷத்துடன் கலைக்கப்பட்டது.

பள்ளத்தூர்

சுமார் 7-மணிக்கு குன்றக்குடியைவிட்டு புறப்பட்டு 7-30 மணிக்கு பள்ளத்தூர் வந்து சேர்ந்தார்கள் நகரசிவன்கோவில்

(தொடர்ச்சி பக்கம் 8-ம் பார்க்க)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-ஹு வைகாசி-மீ 3உ

ஆக்ரமண ஆசையால் அனர்த்தம்.

ஐரோப்பாவில் நடந்து வரும் யுத்தமானது சில தினங்களாக பயங்கர ரீதியில் மாறிவிட்டது. இன்றுள்ள அதன் போக்கைப்பற்றி உலகமே பெரும் கவலையில் ஆழ்ந்து கிடக்க நேர்ந்திருக்கிறது. நார்வேயிலிருந்து நேச தேசப்படைகள் திரும்பிய தன் பலனாக ஜர்மனி புதிய பலமும் உத்ஸாஹமும் கொண்டு ஹாலந்து, பெல்ஜியம் போன்ற சிறிய நாடுகள் மீது பாய்ந்து அவைகளை ஆக்ரமிக்க முற்பட்டிருக்கிறது. பத்திரிகைகளில் வரும் ஸமாசாரங்களைக் கொண்டும், பொறுப்புள்ள மந்திரிகளின் பேச்சைக் கொண்டும் பார்க்கையில் ஹாலந்து, பெல்ஜியம் பிரதேசத்தில் நடக்கும் யுத்தம் போல் இதற்கு முன் எப்போதும் நடந்ததில்லையென்று தெரிகிறது. ஏற்கனவே பல மாஸங்களில் ஸாதிக்கக்கூடாத யுத்த தந்திரங்கள் இப்போது சில தினங்களுக்குள்ளேயே ஸித்தித்து விடக்கூடியபடி புதிய புதிய ஆபூர்வ ஸாதனங்களும், படைகளின் வீர்யமும் வெகுவாக அதிகரித்திருக்கின்றனவாம். எதிரிகளுக்கு இந்த விஷயங்களில் அதிக ஸௌகர்யமாயிருப்பது பற்றி அவர்கள் வேகமாக முன்னேறவும் முடிகிறதாம். லார்டு ஹாலிபாக்ஸ் சொல்லும் பிரகாரம் எதிரிகளின் யுத்த தந்திரம் காரணமாக பிரட்டனின் எதிர்கால நிலைமையைப் பற்றி அங்கு விசேஷக் கவலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இச்சமயம் பிரிட்டனின் வெற்றிக்காக யாவரும் உதவ வேண்டிய ஸந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மனியின் வெற்றி காரணமாக இந்தியாவானது வெறி பிடித்த ஹிட்லர் வசம் சிக்கி விடுவதை இந்திய பிரஜை எவரும் விரும்பமாட்டார். காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் ராஜேந்திர பாபு இந்த நெருக்கடியான ஸந்தர்ப்பத்தில், பிரிட்டனையே நாம் ஆதரிக்க வேண்டுமென்று கூற முன்வந்தது கொண்டாடத் தக்கதே. ஜனநாயக விரோதியான ஹிட்லரின் ஆக்ஷியை விட இங்கிலாந்து ஆக்ஷியே இந்தியாவுக்கு ஏற்றதென்றும், ஆதலால் இங்கிலாந்து ஜயிக்கும் வண்ணம் நாமெல்லோரும் பிரிட்டனுக்கு இந்த நெருக்கடி ஸந்தர்ப்பத்தில் உதவவேண்டியது அவச்யமென்றும் ராஜன் பாபு கூறியுள்ளார்.

ஸத்யாக்ரஹம், ஒத்துழையாமை முதலியவைகளால் கவர்ன்மெண்டை எதிர்க்கும் மனப்போக்குள்ள ராஜன்பாபு போன்றவர்களே அப்படிச்சொல்ல முன்வந்திருப்பதிலிருந்து நிலைமையை, நெருக்கடியை நாம் ஒருவாறு உணரக்கூடும்.

இதுபோன்ற பெரிய யுத்தங்கள் ஏற்படுவதற்கும், கலஹங்கள், சச்சரவுகள் ஏற்படுவதற்கும் முக்கிய காரணமாயிருப்பது அவரவர்களுடைய நியாயமான ஆசையை பங்கம் செய்வதும், பிறருடையதை ஆக்ரமிக்க எண்ணுவதுமேயாகும். ஒரு மனிதன் அல்லது ஸமூஹத்தாருடைய ஆசையைத் தடைசெய்தால் அவர்கள் தங்கள் எதிரிகள் மீது த்வேஷம்கொள்வது இயற்கையேயல்லவா? தனது குடியேற்ற நாடுகளையும் டான்ஸிக் போன்றவைகளையும் மீண்டும் தாமே ஆளவேண்டுமென்ற ஜெர்மனியின் ஆசையைத் தடைசெய்ததாலேயே ஹிட்லர் யுத்தத்திலிறங்கினர். இவ்வாறே ஒவ்வொரு தேசமும் தனது ஆசாபங்கத்தை ஸஹிப்பதில்லை. பிரதீகாரம் செய்ய முற்படுகிறது.

இந்த உணர்ச்சி மனிதனிடம் மட்டுமில்லை. மிருகம் பக்ஷி முதல் புழுக்கள் வரையில் பார்த்தால்கூட அவைகளனைத்தும் தனது ஆசாபங்கம் செய்வோருடன் போர் செய்வது இயற்கையாயுள்ளதே. அதன்படியே ஜர்மனி யுத்தம் செய்வதாகச்சொல்லப்பட்ட போதிலும், அது சில விஷயங்களில் அநியாயமான ஆக்ரமணத்தில் இறங்குவதாக மற்ற தேசத்தார் அதைக்கண்டிக்கின்றனர். இது நியாயமானதே. ஆயினும், எது ஆக்ரமணம், எது அநாக்ரமணம் என்பதை நிர்ணயிப்பதில் அவரவர் தம் தம் மனஸ்ஸாக்ஷியையே பிரமாணமாகக்காட்டுவது தான் சண்டைக்கு இடமாகிறது. நியாயங்களையும், வழக்கங்களையும், வியவஸ்தைகளையும், உரிமைகளையும் கவனித்தே அதை முடிவு செய்யவேண்டுமென்ற ஸத்புத்தி இப்போது எங்கும் காணப்படாததே உலக அமைதியின்மைக்குப் பெரும் காரணமாக நிற்கிறது. இந்த உண்மையை அறிந்து நீதிப்படி நடந்தால் சச்சரவிற்கு இடமிராது. உலகத்திற்கு உபதேசிகளாக விளங்குகிறவர்களே துராக்ரமண வேலையில் முனைந்து நின்றால் அமைதியேற்படுவதெப்படி? ஒருவரையொருவர் கண்டிக்க வாய் ஏற்படுமா?

பிரிட்டனுக்கு இந்த நெருக்கடியான ஸந்தர்ப்பத்தில் உதவவேண்டியிருந்தும், காங்கிரஸும், காந்திஜியும் அதன்மீது குற்றம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சில மாதங்களுக்குமுன் காரியக்கமிட்டி செய்த தீர்மானமொன்றில் பிரிட்டன்மீது காங்க்ரஸ் பல குற்றங்களை வெளியிட்டது. பிரிட்டனது ஏகாதிபத்ய முறை என்ற தீமையை கொண்டு ஆக்ரமண வேலையிலும், சுரண்டும் வேலையிலும் அதுமுனைந்திருப்பதாக காந்திஜியும் சொல்லிவருகிறார். ஆனால் இதே குற்றத்தையே காந்திஜி ஒரு உயர்ந்த தர்மமாகச் சொல்லிக்கொண்டு இந்தியாவின் உள்நாட்டில் அமைதியை கெடுத்துவரவில்லையா?

காங்கிரஸானது, பலாத்காரத்தையும், மனித உணர்ச்சியை அடக்கியாளுவதையும் ஆக்ரமணத்தையும் கண்டிக்கிறதாக காங்கிரஸ் அறிக்கையில் பெருமையாகச் சொல்லிக் கொண்டபோதிலும், அது காந்திய விஷமத்தைக் கடைபிடித்து, மனித உணர்ச்சியை நியாயமற்ற வழியில் அடக்கிவருவதையும், நியாயம், தர்மம், வரம்பு ஆகியவைகளை மீறி ஆக்ரமண அநீதியால் பிரஜைகளின் உரிமைகளைப் பிடுங்கி பஹிரங்காகச் செய்த கொடுமைகளையும், ஒன்றரை நாழி ஆக்ஷியில் உலகம் கண்டு நகைக்கவில்லையா?

ஸ்ரீ சங்கர ஜயந்தீ உத்ஸவ ஸமாசாரங்கள்

ஷை விஷயமாக நமக்கு அநேக விடங்களிலிருந்து கடிதங்கள் வந்திருக்கின்றன. அவைகள் காலதாமதமாக வந்ததால் இந்த வாரம் பிரசுரிக்கப்படவில்லை. இன்னும் கிடைக்கும் விவரங்களையும் சேர்த்து அடுத்த வாரம் பிரசுரிக்கப்படும். அனுப்புகிறவர்கள் திங்கள் கிழமைக்குள் அனுப்ப வேணும். சந்தாதார்களாயுள்ளவர்களின் கடிதங்களே முதலில் கவனிக்கப்படும்.

மானேஜர்.

ஆகையால் காங்கிரஸ் தனது குற்றங்குறைகளை உணர்ந்தும், பேரம் பேசுவதை விட்டும் இந்த நெருக்கடியான ஸந்தர்ப்பத்தில் ஸத்யாக்ரஹம் போன்ற கலஹங்களை விளைவிப்பதாக பயமுறுத்துவதை நிறுத்தியும் பிரிட்டனுக்கு உதவிபுரிய வேண்டிய பொறுப்பை உணரவேண்டியது அவச்யமென்று ராஜன் பாபுவின் அறிக்கையினாலேயே உறுதிப்படுகிறது.

குடந்தை முனிஸிபாலிடியின் விபரீதம்

9-உயன்று நடந்த முனிஸிபல் கூட்டத்தில் குடந்தை நகரஸபை எல்லையிலுள்ள பெண்களுக்குக்கட்டாய இலவசக்கல்வி போதிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதாம். அடுத்தவருஷம் இது அநுஷ்டானத்திற்குவரும்.

திருச்சியிலுள்ள ஹிந்தி பிரசாரஸபைக்கு ரூ 100 தானம் செய்ய தீர்மானிக்கப்பட்டதாம். ஏழைகளை நிர்பந்தித்து வாங்கும் வரிப்பணத்திற்கு இது நியாயமான செலவா? இந்த நகரத்தேவைகள் பூர்த்தியாகிவிட்டனவோ? முனிஸிபல் ஸம்பந்த மற்ற இந்தச்செலவை கவர்ன்மெண்டார் தடுக்க வேணும்

ஒரு நிருபர்

காந்திஜியின் ஸ்வரம் இறங்குகிறது

ஸமரஸத்திற்குத் தயாராம்

டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையின் விசேஷ நிருபர் காந்திஜியைக்கண்டு தற்கால நெருக்கடி விஷயமாகச் சில கேள்விகள் கேட்டதற்கு காந்தி கூறியுள்ள பதிலில்:—

"கௌரவத்திற்கு குறைவுவராத எந்த ஒப்பந்தத்திற்கும் நான் தயார். அரசியல்நிர்ணய ஸபைக்குப் பதிலாக வேறு வழி இருப்பதாக யாராவது எடுத்துச் சொன்னால் அதை நான் அங்கீகரிக்க ஸித்தமாயிருக்கிறேன். ஆங்கிலேய பிரதிநிதிகளும் இந்திய பிரதிநிதிகளும் கலந்த பூர்வாங்க யோஜனைக்கூட்டத்தையும் நான் ஒப்புகிறேன்,, என்று தமது அபிப்பிராயத்தை தெளிவாகக் கூறியிருக்கிறார். அரசியல் நிர்ணய ஸபையைத் தவிர வேறு எதையும் அங்கீகரிக்க முடியாதென் முன்பு அவர் சொல்லி வந்தது யாவரும் அறிந்ததே.

தக்ஷிணாயநத்தில் பிரதம விவாஹம்.

குடந்தை அத்வைத ஸபை விசாரத்தில் நிர்ணயம்

வியவஸ்தாபத்திர விவரம்

சென்ற பிரமாதி-௵ ஆடி-௴ 29௳ ஆரம்பித்து குடந்தை ஸ்ரீ மடத்தில் நடைபெற்ற அத்வைத ஸபையில், தக்ஷிணாயந பிரதம விவாஹத்தைப் பற்றி விசாரம் நடைபெற்றது. அந்த விவாஹ விஷயமாக தர்ம சாஸ்திர ஸம்பந்தமான விசாரம் நடத்தி நிர்ணயம் வெளிப்படுத்த வேணுமென்று சில ஆஸ்திகர்களால் பிரேரணை செய்யப்பட்டது.

அதையனுஸரித்து பண்டிதர்களுள் நடந்த விசாரத்தில் எல்லோரும் சேர்ந்து போலகம் பிர்ம்மஸ்ரீ ராமஸ்வாமிசாஸ்திரிகள், ஸ்ரீமான் கே. பாலஸுப்ரமண்ணிய அய்யர், வித்வான் ஸ்ரீராமசந்திர தீக்ஷிதர் ஆகியவர்களை மத்யஸ்தர்களாக நியமித்தார்கள். கீழ்கண்ட விஷயம் ஸபையில் விசாரிக்கப்படவேணுமென்று நிர்ணயிக்கப்பட்டது:

அதாவது:—

1, தர்ம சாஸ்திர. ஸ்மிருதி, நிபந்தனதிகளில் தக்ஷிணாயந பிரதம விவாஹம் அனுமதிப்படுகிறதா, இல்லையா?

2. அந்த விவாஹமானது ஸமாவர்த்தன பூர்வகமாக அனுமதிக்கப்படுகிறதா? என்பது.

இதில் தக்ஷிணாயனத்தில் பிரதம விவாஹ அனுமதி இருக்கிறதென்ற கக்ஷியை பாஷ்யபாவக்ஞ பிரம்மஸ்ரீ, ஸ்வா வெங்கடராம சாஸ்திரிகள் ஏற்றுக்கொண்டு பேசினார்கள். அவர்கள் காட்டிய பிரமாணங்களாவன:-

1. ஸவ௱தகாலெவ விவாஹஸ்௺

என்பவை போன்ற ஸ்மிருதி வசனங்கள் தக்ஷிணாயந விவாஹத்தை போதிக்கின்றன.

2. "ஸாவ௱காலிக௵௵" என்ற ஸூத்ரத்தினால் ஒரே பக்ஷமாக எல்லா காலமும் விவாஹத்தில் அநுமதிக்கப்படுகிறது.

(3) ஆமஸ்தம்ப கிருஹ்ய வ்யாக்யானமான "தாத்யர்ய தர்சநத்திலும், தர்மஸிந்துவிலும்

யதாதக்ஷிணாயநேவிவாஹ: ததா ஸமாவத௱நஉவிததீவகாலுவணவ என்றும்

ஊம௱ஸீஷெ௱விவாஹஸ்ஸகௌ தக்ஷிணாயநேபிஹவதி" என்றும் ஸமாவர்த்தன பூர்வகமான விவாஹம் நிர்த்தேசிக்கப்படுகிறது.

(4) "தாத்பர்யதர்சன„ த்திலேயே ஸமாவர்த்தனத்திற்கு உத்தாராயண நியமமில்லாமையும் யுக்திபூர்வகமாக விவரிக்கப்பட்டுள்ளது.

5. ஆச்வலாயந கிருஹ்யவியாக்யானமாகிய "நாராயணீய"த்திலும், "கன்னிகைக்கு ரஜஸ்வலாதோஷம் ஏற்படு மென்ற பயம் இருந்தால் விவாஹம் எக்காலத்திலும் செய்யலாமென்று வியவஸ்தை செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையால் மேலே காட்டப்பட்ட ஐந்து ஹேதுக்களால் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஸந்தேஹத்தின் இரண்டு அம்சத்தில் தக்ஷிணயன விவாஹ அனுமதி பக்ஷமே யுக்த மாகிறது"

பிரும்மஸ்ரீ போலகம் ஸ்ரீஸுந்தரேச சாஸ்திரியரின் எதிர் அபிப்பிராயம்.

அனுமதி பக்ஷத்தை எதிர்த்தும், அனுமதி கிடையாதென்ற பக்ஷத்தை ஆதரித்தும் ஸ்ரீ சாஸ்திரிகள் அபிப்பிராயப்பட்டதாவது:—

1. குறிப்பிட்ட மாஸங்களில் செய்யவேண்டியதாக விதிக்கப்பட்ட ஸீமந்தம் போன்றவை தவிர, மற்ற எல்லா சுபகர்மங்களுக்கும் பொதுவாக உத்தராயணமே காலமென்று ஸர்வ ஸ்மிருதிகளின் விதியாகும்.

2. மௌஞ்ஜீபந்தஸமாவர்த்தவிவாஹாவ௺ உத்தரம் வர்ஜநீயம்

க்ஷயாஸாஹிவ தஉ௱வஸாநுவ। ஹ்ரஸ்வாநு வௌஷம் வஜ௱யெசு।

விஷ்ணோ: ஸ்வாபாவவெநாத்ராநஉயெ௺ வெநெவொவநாயநம்। விவாஹம் வெந வகவிடுத

இத்யாதி வசனங்களால் விவாஹத்தில் தக்ஷிணயநமாஸங்கள் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றன.

3. உதகயநசூவ௺யஊணவகெஷ

என்று, கர்மங்களில் பொதுவாக உத்தராயணம் ப்ராப்தமாயிருக்கையில் அதற்கு மறுபடியும் விதியிருப்பதானது, விவாஹத்தில் கௌணமாகக்கூட தக்ஷிணயநம் காலமாகக் கூடாதென்று தடுப்பதாயிருக்கிறது.

(4) ஆச்வலாயந கிருஹ்ய ஸூத்ரத்தில் கன்னிகை ருதுவாகி விடுவளென்கிற பயமேற்படும்போது விவாஹத்தை எல்லா காலங்களிலும் செய்யலாமென்ற நாராயணீய வ்யாக்யானமானது மூல ஸ்மிருதி பிரமாணம் காட்டாத காரணத்தால் உபேக்ஷிக்கத் தக்கதே.

5. ஸவ௱தகாலெவ விவாஹஸ்௺

என்றிருப்பதால் தக்ஷிணாயந விவாஹம் ஸித்தித்து விட்டபடியால் ஸமாவர்த்தனமும் தக்ஷிணயநத்திலேயே ஆகிர்ஷித்துச் செய்யகூடியதென்று க்ருஹ்யதாத்பர்ய தர்சனகாரர் கூறியிருப்பது ஆஸுராதி அதர்ம விவாஹ விஷயமென்று எப்படியாவது யோஜிக்கவேண்டும்.

ஸவ௱தவ: என்று ஸர்வ பதத்துடன் கூடிய அந்த வசனமானது

அஸுரா௺யெவிவாஹாஸ்து ஸவஸா ஸாவ௱காலிகா:

என்ற வியாஸ வசன பலத்தால் ஆஸுராதி அதர்ம விவாஹ விஷயமென்று ஸ்மிருதி முக்தா பலக் கிரந்தத்தில் வியவஸ்தை செய்யப்பட்டிருப்பதை பார்க்கிறோம்.

6. ஸமாவர்த்தனமானது சௌளத்தின் விக்ருதியென்பதை அங்கீகரித்து

உதகயநெ சூவ௺யஊணவகெஷ வெஷு௱ மொதாநவிவாஹா:

என்று "சௌள விக்ருதியான கோதானத்தில் உத்தராயண கால நியமம் பிராப்தமானதை மறுபடி விதிப்பதானது, ஸமாவர்த்தனத்தில் உத்தராயண நியமம் வேண்டியதில்லையென்று காட்டுவதற்காக" என்று சொல்லும் "தாத்பர்யதர்சன" மானது சௌளத்திற்கும், ஸமாவர்த்தனத்திற்குமுள்ள ப்ரக்ருதி விக்ருதி பாவத்தை ஒப்புக்கொள்ளாததால் கவனிக்கத்தக்கதில்லை.

ஆகையால் மேற்காட்டிய ஆறு யுக்திகளால் ஸ்மிருத்யாதிகளில் தக்ஷிணயந விவாஹம் ஒப்புக்கொள்ளப் படவில்லையென்று ஏற்படுகிறது.

கல்கத்தா ஹிந்துக்கள் கூட்டம் ஸுபாஷின் மீது கண்டனம்

கூட்டத்தில் கலஹம்

8-௳ யன்று இரவு கல்கத்தாடவுன் ஹாலில் வங்க ஹிந்துக்களின் பெரிய கூட்டம் நடைபெற்றது, ஜின்னாவின் பிரிவினை திட்டத்தையும் மேயர் தேர்தலில் ஸுபாஷ் போஸ், லீகுக்கு ஸாதகமாக இருந்ததையும் கண்டிக்கவே இக்கூட்டடம் நடந்தது, போஸ்கக்ஷியார் பெருத்த கலவரம் விளைத்தார்கள், போஸ்செய்கையை ஆதரித்துச் சிலர் கூச்சலிட்டார்கள். கலவரம் முற்றியது. கைகலந்தசண்டை. நாற்காலியுத்தம் நடந்தது. கழிகளும் உபயோகிக்கப்பட்டன, பலருக்குப் படுகாயம். சட்டஸபை மெம்பர் கார்ப்பரேஷன் மெம்பர் போன்ற அனேக ஹிந்து கனவான்களுக்கும் அடி விழுந்தது, காயமும் ஏற்பட்டது, காங்கிரஸ் காரரின் விஷமத்தை என்னென்று சொல்வது?

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையில்லையேல் பதவிஏற்கப்போவதில்லை

காந்திஜியின் உறுதி

டைம்ஸ்ஆப் இந்தியா பத்திரிகையின் நிருபர் 10௳யன்று காந்திஜியைக் கண்டு பேசியபோது பிரிட்டன் நல்லெண்ணத்துடன் ஒரு ஸமரஸ மஹாநாடு கூட்ட ஸம்மதித்தால் மீண்டும் காங்கிரஸ் மந்திரிபதவிஏற்க ஏற்பாடு செய்வீர்களாவென்று கேட்டதற்கு காந்தி கூறிய பதிலாவது:—

"ஹிந்து முஸ்லீம் ஒப்பந்தம் ஏற்படும் வரையில், காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவி ஏற்கும்படி நான் தூண்டமாட்டேன். நான் சற்றுப் பொறுத்தப் பார்க்கவேண்டும்„

சிவஸ்வாமி அய்யரின் சிபார்சு

காங்கிரஸ், பதவி ஏற்கவேண்டுமாம்?

தேசநிலைமையைபற்றி ஸர் சிவசாமி அய்யர் 6-௳யன்று தமது அபிப்பிராயத்தை ஒரு அறிக்கை மூலம் வெளியிட்டிருக்கிறார். அதில் அவர்,

வகுப்பு ஒற்றுமையில்லாவிடில் ஸ்வராஜ்யமில்லையென்ற வாதத்தை ஜட்லண்ட் பிரபு மட்டும் சொல்லவில்லை. காந்திஜியும் அதையே தான் சொல்லுகிறார். அப்படியிருக்க இந்தியா மந்திரியை மட்டும் கண்டிப்பானேன் என்று ஸர் அய்யர் கேட்கிறார் மேலும் அரசியல் நிர்ணயஸபை அநுபவஸாத்ய மற்றதென்றும், மைனாரிடிகளின் உரிமைக்காக பிரிட்டன் பாதுகாப்புக் கொடுத்து வருவது அவச்யமென்று நினைக்கப்படுவதாயும், அது அநியாயமல்லவென்றும், சட்டமறுப்பானது மிக அபாயமானதென்றும், அதனால் வகுப்புச் சச்சரவும், உள் நாட்டுக் கலஹமும் ஏற்படுமென்றும், இந்தியாவைப் பிரிக்கும் திட்டம் மிக அபாயமானதென்றும், எவ்வளவு கலஹம் நேர்ந்தபோதிலும் அதை எதிர்த்துத்தீர வேண்டுமென்றும், காங்கிரஸானது மீண்டும் பதவியேற்பது விரும்பத்தக்கதென்றும் அதனால் தேசநிலைமை சீர்படுமென்றும் ஸர் சிவஸ்வாமி அய்யர் கூறியிருக்கிறார்.

(இவ்வாறு ஸ்ரீ ஸுந்தர சாஸ்திரிகள் அபிப்பிராயப்பட்டதின் மேல், மத்யஸ்தர்கள் தங்களுடைய விவஸ்தையை வெளியிட்டிருக்கிறார்கள். அது அடுத்த ஸஞ்சிகையில் வரும்.)

மணலூர் வீரவல்லி

இராமானுஜாசாரிய ஸ்வாமிகள்

(ஊ. சா. வேங்கடராமையர்)

வியாச பாரத தமிழ் மொழி பெயர்ப்புப் பதிப்பாசிரியர், பாஷா பாரத துரந்தரர்— மஹா மஹோபாத்தியாயர்-ஸ்ரீ உ. வே. ம. வீ. இராமானுஜாசாரிய ஸ்வாமிகள் பெரும் பிரிவு எய்தியமை தமிழ் நாட்டார்க்கும், வித்யா விநோதர்களுக்கும் ஆற்றொணாத் துயரத்தை அளிக்கக்கூடியது. அவர்கள் தமிழ் நாட்டார்க்கும் தமிழ் மொழிக்கும் செய்துள்ள பேருதவியை நினைக்கும் அறிகுறியாகச் சிலவற்றைக் கூறி எனது மனத்துயரத்தை ஆற்றிக் கொள்ள விரும்புகிறேன்.

நமது நாடு அறிவுக் களஞ்சியம் என்ற புகழினைப் பெற்றுத் திகழ்வது. அந்தப் புகழ்ச்சி அதற்கு உண்டானதற்கு வேதம், இதிகாஸம், புராணம் முதலியனவும், பிற ஆத்ம சாஸ்திரங்களும் நிரம்பியிருப்பதே காரணம். அவ்வாறு நிறைந்துள்ள கலைச்செல்வங்களை முற்றும் கற்க வசதியும் தகுதியும் உரிமையும் இல்லாதவர்களும் கற்றுப் பயன்படும் பொருட்டு "இங்கே உள்ளதே மற்ற நூல்களில் உள்ளது; இங்கே இல்லாதது வேறொன்றினுமில்லை" என்றும், "ஐந்தாம் வேதம்" என்றும் சிறப்பித்துக் கூறப்படும் ஸ்ரீமத் மஹாபாரதம் ஆண்டவன் கட்டளைப்படி கிருஷ்ணத்வைபாயனர் என்ற வேத வியாசபகவானால் வடமொழியில் இரண்டு லக்ஷம் வரிகளில் கூறப்பட்டது. அதன் முழுச்சிறப்பும் சென்ற நூற்றாண்டு வரையில் தமிழர்களுக்குக் கிடைக்கவில்லை.

சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பாரதம் என்ற பெருநூல் சங்கத்தார் காலத்தில் இருந்ததாக அறியப்படுகிறது. ஆனால், அது முற்றும் கிடைக்கவில்லை. பின்னர் ஏழாம் நூற்றாண்டில் ஒரு பாரதம் எழுதப்பட்டதாக அறிகிறோம். அதுவும் முற்றும் கிடைக்கவில்லை. சில பருவங்களே சிதறுண்டு கிடைக்கின்றன. பிறகு பதினான்காம் நூற்றாண்டில் வீரராகவாசாரியார் என்ற ஸ்ரீ வில்லிபுத்தூரார் தமது அரசன் வேண்டுகோளின்படி இயற்றித் தந்த சுவை மிகுந்த வில்லி பாரதமோ முற்றும் எழுதப்படவில்லை; தொடர்ச்சியாக மொழி பெயர்ப்புப் போலவுமில்லை; அகஸ்திய பட்டர் என்பவர் செய்த பால பாரதத்தைப் பின்பற்றியதோ என்று ஐயுற வேண்டியதாகவும் இருக்கிறது. இப்பால், இதில் எஞ்சியுள்ள குறைகளை நீக்க முயல்பவர்கள் போலப் பாரதம் பாடிய நல்லாப்பிள்ளை, அரங்கநாதகவி முதலியவர்கள் செய்தவற்றையும் சேர்த்துப் பார்த்தாலும் அவை நமது பாஷா பாரத துரந்தரரவர்கள் முயற்சியால் பூர்த்தியாகி வெளி வந்துள்ள பாரதத்தை நோக்கப் பெரிதும் குறைவுள்ளனவே.

ஐயாயிரம் வருஷங்களுக்கு மேலாகத் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டார்க்கும் பெரிதும் இன்றியமையாததாகிக் கிடைக்கப் பெறுமலிருந்த ஸ்ரீமத் மஹாபாரதம், நமது மஹா மஹோபாத்தியாய ஆசார்ய ஸ்வாமிகள் அவர்களுடைய விடாமுயற்சியால் இன்று கிடைத்துள்ளது. அந்த வடமொழி மஹாபாரதமோ சிறந்த அறிஞர்களால் வடமொழிப் பாண்டித்தியம் பெற்ற-பாரத வர்ஷம் முழுவதிலுமுள்ள,—சில நூறு பண்டிதர்களாலே படிக்கப்படக் கூடியது. இந்தத் தமிழ் மொழி பெயர்ப்போ இரு கோடிக்கு மேற்பட்ட தமிழ் மக்களால்,—ஆண் பெண் வேறுபாடின்றிப்,— படித்தறிந்து கொள்ளக்கூடியது.

பாஷா பாரத துரந்தரராகிய நமது தமிழ் வியாசர், சிறுவயதில் குடும்பத்திலும் பந்துக்களிடத்திலும் தோன்றிய வெறுப்புக் காரணமாக— இதனை அவர்கள் வெளிக்காட்டிக் கொண்டதே இல்லை—ஸ்ரீ காசியம்பதிக்குச் சென்று வடமொழி தென்மொழிகளைப் பயின்று தாய்மொழியைத் தட்டமாட்டாது சொந்த ஊருக்குத் திரும்பி வந்தனர்; சிலநாட்கள் கிராம முனிசீப்பாக இருந்தனர்; இடையிடையே மஹா மஹோபாத்தியாய—தாட்சிணாத்திய கலாநிதி-திராவிட வித்யா பூஷணம்—டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்களிடம் பழகினமையால் நமது நகர் நேடிவ் ஹைஸ்கூலில் தமிழாசிரியராக அமர்ந்தனர். அக்கால், ஸ்ரீமத் ஐயரவர்கள் சங்கத் தமிழ் நூல்களைப் பதிப்பித்துப் பெரும் புகழ்பெற்று விளங்குதலையும், தாம் தமிழாசிரியராய் இருக்கும் பள்ளிக்கூடத்தின் சொந்தக்காரரும் மானேஜரும் ஹெட்மாஸ்டரும் ஆகிய வித்யாப்பிரசாரப் பிரவீண—ராவ்பஹதூர் எஸ். அப்புசாஸ்திரியார் அவர்கள் சிறந்த நிர்வாகி என்று புகழ்பெற்று வருதலையும் பார்த்துத் தாமும் அத்தகைய பெரும் புகழைப் பெறவேண்டும் என்று கருதினர்.

"கருவிலே திருவுடையர்" என்பதுபோல மஹாபாரதத்தைத் தமிழில் அளிக்கத் தோன்றியவர்கள் நமது ஸ்வாமிகள் என்பது இல குறிப்புக்களால் உறுதிப்படலாயிற்று. மஹாபாரதத்தில் பயின்றுவரும் தமிழ்ப்பெயர்களுள் ஒன்றைப் பெற்ற மணலூர் அவர்களது ஜன்மபூமியாயிற்று; வேதந்தமிழ்செய்த விரகராகிய திருஞானசம்பந்தர் தோன்றிய கவுண்டின்ய கோத்திரமும் சேர்ந்தது. தமிழ் மொழியும் தமிழ்நாடும் செய்த தவப்பயனாகப் பாரதம் முழுவதும் வெளிவந்தது. இதவரையில் உலகத்திலே வெளிவந்துள்ள நூல்களுள் சற்றேறக்குறைய ஒன்பதினாயிரம் பக்கங்களைக் கொண்ட பெருநூல் நமது பாஷாபாரத துரந்தரரவர்கள் வெளியிட்ட தமிழ் மகாபாரதமே.

இத்துணைச்சிறந்ததும் அறிஞர்களுக்குக் கருவூலம் போன்றதுமாகிய தமிழ் மகாபாரத வசனம் எவ்வாறு வெளிவந்தது? நமது நாட்டிலுள்ள பிரசித்திபெற்ற கியாதி வாய்ந்த பல சிறந்த வடமொழிப் பண்டிதர்களால் மொழி பெயர்க்கப்பட்டது; பல பண்டிதர்களால் ஒத்துப் பார்க்கப்பட்டது; தமிழிலே சிறந்த அறிஞராகிய ஆசாரியரவர்களாலும் அவர்களால் நம்பப்பட்ட வேறு சில அறிஞர் கூட்டத்தினராலும் பாஷை, நடை முதலியன பரிசோதிக்கப்பட்டு உருப்பெற்றது; இருபத்தைந்து ஆண்டுகளில் நிறைவேறியது.

இத்தகைய பெருநூல் அரசாங்கத்தாரால் வெளியிடத்தக்கது. ஆனால் ஓர் ஏழை அந்தணரால் வெளியிடப்பட்டது. இதுபற்றித்தான் மஹாபாரதத்தைத் தமிழில் அளிப்பதற்கென்றே ஆண்டவனால் அனுப்பப்பட்டவர் நமது ஆசாரியர் என்று கருத்துப்படும்படி அடியேன் மேலே கூறினேன்.

நமது ஸ்வாமிகள் தொடங்கிய காரியத்தை இனிது நிறைவேற்றுவதில் கண்ணுங் கருத்துமாயிருந்து விடாதுமுயலும் ஊக்கம் மிகுந்தவர்; தெய்வ பக்தியுள்ளவர்; சிறந்த கர்மயோகி; தியாக சீலர்; தம்மை நெருக்கும் துன்பத்திற்குத் துன்பம் செய்யும் உறுதியாளர். அவருடைய வாழ்க்கையில் ஐம்பதாண்டுகளைப் பற்றி அடியேன் ஏதும் அறியேன். அடியேன் பழகத்தொடங்கிய இருபத்து மூன்றாண்டுகளில் மேலே காட்டிய நறுங் குணங்கள் அவர்களிடம் வளர்ந்துகொண்டே வந்தமையை அடியேன் கவனித்துள்ளேன்.

ஒருவர்க்கு ஒரு நல்ல பெரிய காரியத்தைச் செய்து முடிக்கும் ஆற்றல் இருக்கலாம். ஆனால் அவருக்கு அதனை நிறைவேற்றத் தடையாகப் புத்திரமித்திரகளத்திராதிகள் இருப்பது இயற்கை. நமது மஹாமஹோபாத்தியாய ஸ்வாமிகளுக்குப் படிசொற்றவருத பத்தினித் தேவியாரும், குறிப்பிற் பணிந்து நிற்கும் குமாரனும் கிடைத்தமை பேராச்சரியம். இரவு பதினொரு மணிக்கு மேல் வரும் விருந்தினர்க்கு அறுசுவையுடன் விருந்தளித்தலும், உத்தியோகத்தையும் விட்டுத் தந்தையார் சொற்படி நிற்பதையே மேற்கொண்டு நிற்றலும் இக்காலத்தில் மிக அருமை. இன்சொல்லை மென்சொல்லாகப் பேசும் இயல்பு வாய்ந்த நமது பாரதப் பதிப்பாசிரியருக்குப் பத்தாயிரக்கணக்கில் நட்பாளர் இருப்பது ஓர் அதிசயமன்று.

தமிழ் மஹாபாரதம் முழுவதும் பூர்த்தியாகி வெளிவந்துளதானாலும் அது பற்றிக் கூறிய ஜோஸியம் முற்றும் பொய்த்துப் போய்விடவில்லை. தமிழ் நாட்டார் செய்த துர்ப்பாக்கியம் போலும் அவர்கள் நமது பாரத சம்பந்தமாக எழுதிவைத்துள்ள "விஷய விளக்கக் குறிப்பு" "கால நிர்ணயம்" ஆகிய இரண்டு நூல்கள் வெளியிடப்படவில்லை. அவை நமது ஸ்வாமிகளால் மிக முயன்று தக்க ஆராய்ச்சியுடன் எழுதிவைக்கப்பட்டுள்ளன. அவர்கள் வெளியிடக் கருதி மொழிபெயர்க்க மேற்கொண்டு நடத்திவந்த வேறு சில நூல்களையும், அவை நடைபெற்று வரும் முறையும் பற்றிக் கூறி என்னையும் தமிழ் நாட்டாரையும் இன்னும் துன்பத்திற்குள்ளாக்க நான் துணியவில்லை. அவர்கள் இன்னும் சிலகாலம் உயிரோடிருப்பார்களாயின் தமிழ் நாடு அடையகூடிய பயன்கள் பல என்று மட்டில் கூறி நிற்கிறேன்.

மஹாமஹோபாத்தியாய ஆசாரிய ஸ்வாமிகள் தமிழ் மஹாபாரத மொழிபெயர்ப்பால் மாத்திரமன்றித் தமிழாசிரியராகவும், தமிழ்நூற் பதிப்பாசிரியராகவும் செய்துள்ள தமிழ்த் தொண்டுகளும் பல ஆண்டுகள் சர்வ கலாசாலைக் கழகங்களில் அங்கத்தினராயிருந்து அவ்வப்போது செய்துள்ள சீர்திருத்தங்களும் பல. அவை அனைத்தும் இன்றும் தமிழ் மொழிக்கும் தமிழர்க்கும் துணையாக நின்று பயனளிக்கின்றன.

நமது நாட்டிலே தேசபக்தர்களைப் போற்றிப் புகழ்கையில் "உடல் பொருள் ஆவி யெல்லாம் உலகத்திற்கே கொடுத்துத் திடமுடன் பாடுபடும்" என்ற தொடரால் புகழ்வதுண்டு. அந்தப் புகழ் நமது ஆசாரிய ஸ்வாமிகளுக்கு உண்மையில் பொருந்தும். பொருளில்லாமல் மஹாபாரத மொழிபெயர்ப்பாகிய பெரிய வேலையைத் தொடங்கி, ஆண்டவன் திருவருளால் அரசாங்கம் போல் வரவு செலவு நடத்தித் தொடங்கிய நூலைப் பூர்த்திசெய்து, முன் போலவே பொருளில்லாமல் வெறும் பண்டிதராகி—ஆனால் பாஷா பாரத துரந்தர, மஹாமஹோபாத்தியாய என்ற விருதுகளையுடைவராகி—மகிழ்ந்து ஆண்டவன் திருவடியை மறவாமல் அன்பும் அருளும் உடையவராய் அவர்கள் வாழ்ந்து வந்தவர்கள்.

[தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க.]

ஹிந்து மதமும் காங்கிரஸ்காரரும்

ராமேஸ்வரம் ஸனாதன தர்ம மகாநாட்டில் உபசரணைத் தலைவர் ஸ்ரீமான் பீமா சங்கர பட்டர் செய்த பிரஸங்கம்

இவ்வித கஷ்ட நஷ்டங்கள் ஏற்படா வண்ணம் நம்மதப் பிரசாரமும் நம்மதப் புத்தகங்களை படிக்கச் சொல்லுவதும் மிக அவசியம். இது நிற்க தற்கால சீர்திருத்தக்காரர்கள் மேல் நாட்டுக் கல்வியின் பயனாக நம்மதத்தை சிறிதும் தெரிந்து கொள்ளாமலும் தெரிந்தவனையும் லக்ஷியம் செய்யாமலும் தான் தோன்றியவாறு இந்து மதத்தை சீர்திருத்துவதாகக் கூறி இந்து மதத்தை பாழாக்குகின்றார்கள். இவ்விதம் பாழாக்குவதே ஆதி திராவிடர்களின் முன்னேற்றமாம். இவ்விதம் கூறுபவர்களில் தற்காலம் முதன்மையாக விளங்குபவர்களே காங்கிரஸ் மகா ஜனங்கள். இவர்கள் தேசமக்களுக்கும் மதத்திற்கும் விளைவிக்கும் கொடுமை! அப்பப்பா! சொல்லிமுடியாது. புறமதத்தினர் விளைவிக்கும் கொடுமையைக் காட்டிலும் இவர்கள் கொடுமை சொல்லொண்ணாதது. ஏன்? மற்றவர் செய்யும் மோசடியையும் புறமதத்தினர் என்றகாரணம் பற்றி உதறித்தள்ளிவிடலாம். காங்கிரஸ் காரர்களோவெனில் தங்களை இந்துக்கள் என்றும் சனாதனிகளென்றும் கூறிக்கொண்டு இந்துக்களுக்கு முக்கிய பிரமாணங்களான வேத சாஸ்திரங்களை நம்புவதாகச் சிலரும் அதை குறை கூறுபவர் சிலருமாக இருந்து சாஸ்திரங்களுக்கு, தங்களுக்கு சிறிதும் சாஸ்திரப்பயிற்சி இல்லாததால் விபரீதமாய் பொருள் கூறி விபரீதப் பிரசாரம் செய்து மக்களை ஏமாற்றி அரசாங்கத்தை கைப்பற்றி சட்டமூலமாக பண்டிதர்களையும் ஆலயங்களையும் பரிதவிக்கும் நிலையில் சந்தியில் நிறுத்திவிட்டார்கள் தன்கையாலேயே கூரையில் நெருப்புவைத்துக் கொண்டு உள்ளே அகப்பட்டுக் கொண்டவனின் கெதிப்போலாயிற்று. இவர்கள் கூறும் கூற்றையும் சிறிது ஆராய்ந்து கண்டித்து தக்கன செய்ய வேண்டியதை சீக்கிரம் செய்து நம்மதத்தைபாதுக்காக்கவேண்டும்.

நம் சனாதன வைதீக மதத்தை சேர்ந்தவர்களென்று சொல்லிக்கொள்ளும் பிற மதத்தினரான காங்கிரஸ்காரர்கள் ஆலயப் பிரவேசம் செய்வித்தற்கு சாஸ்திரத்தில் ஆதாரமிருப்பதாகக் கூறி உலகத்தை ஏமாற்ற நினைக்கின்றார்கள். அவர்கள் நினைப்பு பகற்கனவேயாகும். மேலும் அவர்களை நாம் சில கேள்விகள் கேட்ப்போம், அதாவது நீங்கள் இந்துமதத்தை சேர்ந்தவர்களா? அவ்விதமாயின் இந்து மதத்திற்கு ஆதாரமான வேதசாஸ்திரங்களை நம்புகிறீர்களா, நீங்கள் வேதசாஸ்திரங்களை நம்பும் ஜாதி ஹிந்துவாக இருப்பது உண்மையானால் உங்கள் கொள்கையும் நடத்தையும் வேதசாஸ்திரங்களுக்கு உகந்ததா என்று கேட்டால் ஆதாரங்களுடன் வேதசாஸ்திரங்களையும் நம்பும் உண்மைச் சனாதனிகளென்று நிரூபணம் செய்யட்டுமே? எக்காலத்திலும் மாறுதலடையாத இந்து சாஸ்திரங்களை கொண்டு எப்பிறவியிலும் இவர்களால் நிரூபணம் செய்ய முடியுமா வென்பது நிச்சயம். மற்றொரு கேழ்வையும் கேட்போம். கடவுள் உண்டென்பதை அவரைவழிபடுவதற்கு ஆலயம் ஒரு சாதனம் என்பதையும் ஆலய நிர்மாணம் செய்யவேண்டிய முறையையும் ஏற்றுக்கொள்ளுகின்றீர்களா? ஏற்றுக்கொண்டால் எந்தநூலின் ப்ரமாண பலத்தைக்கொண்டு நம்புகிறீர்கள் என்றால் தகுந்த பதில் கூறத்திறமை கிடையாதென்பது நிச்சயம். ஏன்? ஆலய நிர்மாணம் செய்ய வேண்டியதையே அக்கோயில் கடவுளை வழிபட சிறந்த சாதனமெனவற்புறுத்திக்கூறி ஒவ்வொரு ஒவ்வொரு ஜாதியினரும் எம்முறையைக் கையாண்டு கடவுளை வணங்குவது என்ற முறையையோ அம்முறையில் நின்றுதவறினால் ஏற்படும் அனர்த்தங்களையோ விரிவாகக்கூறுவது ஆகம சாஸ்திரமென்பது பிரசித்தம். அவ்வாகமத்தை சிலவற்றிற்கு ஒப்புக்கொள்வது சிலவற்றிற்கு கைவிடுவதென்பது அறிவாளிகளின் செய்கை என்று எவராலும் கூற முடியாது. பாதிச் சுரக்காயை சமையல் செய்து பாதியை விதைக்கு வைத்துக் கொண்ட காட்டு மனிதனின் செயலை ஒக்குமென்பது சிறிதும் சம்சயமில்லை. தீண்டாதார் ஆலயப்பிரவேசம் சாஸ்திர விரோதமென்பதற்கு பல பிரமாண வசனங்களுண்டு.

அவைகளில் சிலவற்றை கூறுகின்றேன். விஷ்வக்ஸேனஸம்ஹிதை 39 அத்யாயத்தில் சுவான குக்குடசண்டாளை: சாதிதேதிருஸ்யதேபுன:— பரித்யஜ்ய ததோன்யாம் சசாதயேத்கலசான்புன: விஷ்ணுரகஸ்ய சம்ஹிதையில் 44வது அத்யாயம் அஸ்பிருஸ்யைஸ்பிருச்யதே சைவ துச்சரைரந்தியஜாதிபி: ! ஏதத்தோஷ விசுத்யர்த்தம் ஆலயேவிஷ்ணுமந்திரே !! அதாவது நாய், கோழி, சண்டாளர்கள் மற்றும் தீண்டத்தகாதவர்களும் ஆலயத்தினுள் சென்று அவ்விடமுள்ள பூஜாசாம்கிரியைகளைத் தொட்டோ பார்த்தோ செய்தால் அவ்வள சாமான்களையும் தூரத்தள்ளிவிட வேண்டும் அதுவுமன்னியில் மறுபடி கும்பாபிஷேகம் செய்யவேண்டும் இல்லையேல் தன்மண்டலாதிபோராஜாசத்ருபி: பரிபூயதே ! ஸராஷ்டிரம் நாசயேத்பூர்வம் தத்கிராமஞ்சததைவது! அனுவிருஷ்டிர்ப்வேத்தஸ்மின்னு ஸஸ்யாதீன் நாசயேத்துருவம் பிராணிநா சோலலேத்தஸ் மாற்வியாதி பிர்பகுபிஸ்ததா, என்று அதாவது மஹா கும்பாபிஷேகம் செய்யாதிருந்தால் அத்தேசத்தரசன் சத்ருவால் பீடிக்கப்படுவன், சத்ருவான்வன் உடனே அரசன் இராஜ்யத்தையும் பரிசுத்தியை இழத்த கோயில் உள்ள ஊரையும் நாசம் செய்வான். மழை பெய்யாது பயிர் அழியும், பல கொடியநோய்களினால் பிராணிகள் நாசமடைவார்கள் ஆகையால் தீட்டுப்பட்ட கோவில் உடனே சுத்தி செய்யவேண்டும். இது போன்ற பல வசனங்கள் சைவ வைஷ்ணவ ஆகமங்களில் இருக்கிறது. விரிவிற் கஞ்சி விடுத்தோம் நண்பர்களே! இக்கொடிய பாதகத்தில் மனம் துணிந்து தீண்டத்தகாத மக்களையும் உலகத்தையும் பாழாக்கும் நோக்கத்துடன் விடாமுயற்சி செய்துவரும் இந்த காங்கிரஸ் காரர்கள் ஜாதி இந்துக்களா அல்லது இந்துக்களின் வேஷம் தரித்த புறமத்தினரா என்பதை சற்று நிம்மதியாய் ஆலோசிக்குமாறு உங்களை வேண்டுகிறேன். தீண்டத்தகாதவர்கள் புற மதத்தில் சேராமலிருப்பதற்கு இவர்கள் உபாயம் பிரயோஜனமற்றதென்று நன்கு அறியக்கூடியது. தீண்டத் தகாதவர்களை நம்மத போதனை மூலமும் பொருளுதாரவசதி மூலமும் முன்னேற்றமடைய செய்வதே சிறந்த உபாயம் ஆகையால் நாம் எல்லோரும் ஒற்றுமையுடனிருந்து பல வழிகளிலும் பலந்தா முயற்சித்து நன்மை அடைவோமாக,

— கெணபதி சர்மா.

ராயபுறத்தில் ஸனாதந தர்மப்பிரசாரம்

மன்னார்குடி வர்ணாசிரம ஸ்வராஜ்ய சங்கத்தாரின் சிரத்தை

1940 வருஷம் மேமீ 4உ சனிக்கிழமை தினம் ராயபுறத்தில் கெருடோஸ்தவத்தன்று இரவு 6½ மணிமுதல் 8மணிவரையில் பெரும்பூர் பிர்ம்மஸ்ரீ சுப்புஸ்வாமி அவர்களின் தலைமையின் கீழ் மன்னார்குடி ஸ்ரீ உபயவே வித்துவான் ராமபத்திராச்சாரியார்ஸ்வாமி அவர்கள் நமது வைதிக மதத்தின் பெருமையையும் காங்கிரஸ் ஆக்ஷிகாலத்தில் ஏற்பட்ட கெடுதிகளையும், சீர்திருத்தக் காரர்களுடைய ஆக்ஷியில் சாதுக்களாக உள்ள அனைவரும் அகப்படாமலிருப்பதற்கு நமது மதப்பிரசாரம் மிகஇன்றியமையாததென்றும் இதில் எல்லோரும் எந்தெந்த வகையில் யீடுபடலாமோ அந்தந்தவகையிலீடுபடவேண்டுமென்றும் முக்கியமாய் மடாதிபதி களெல்லோரும் ஒன்று சேர்ந்து இக்காரியத்தை நடத்திவைக்கும்படி சிஷ்யர்களான நாமெல்லோரும் மிகவணக்கமாய்க் கேட்டுக் கொள்ள வேண்டுமென்றும். இன்னும் கொஞ்ச காலம் உதாசீனமாயிருந்தால் குரு சிஷ்யக்கிரமம் அழிந்து விடுமென்றும் மதுரை ராவ்-சாகிப்பு என். நடேசய்யர் அவர்களும் என். ஆர். கிருஷ்ணஸாமி அய்யங்கார் அவர்களும், பெண்மணிகளான மீனாக்ஷியம்மாள். சேஷலக்ஷ்மி அம்மாள் முதலானவர்களும் தென்னாட்டில் பிரசாரம் செய்வது போற்றத்தகுந்ததென்றும் கூறினார்.

அந்த மாதிரியான பிரசாரம் நமதுநாட்டிலும் நடக்கும்படியாய் நாம்தகுந்த ஏற்பாடுகளை செய்யவேண்டும் என்றும் மதபரிபாலனசபையார். ஆலயபிரவேசம்போன்ற மதவிரோதமான காரியத்திலீடு படாமல் கோவில் வைதீக காரியங்களை நன்கு கிரஹித்து நடத்தக்கூடிய ஆபிஸர்களை ஏற்படுத்தி மதரக்ஷணத்தில் யீடுபடவேண்டுமென்றும் ஒவ்வொரு ஊரிலும் வர்ணாச்சிரம சுயராஜியகிளைச் சங்கம் ஸ்தாபிக்க வேண்டு மென்றும ஆரியதர்மப் பத்திரிகையை ஒவ்வொரு ஊரிலும் ஆதரிக்க வேண்டுமென்றும், வெகுஅழகாக உபந்நியசித்தார்கள். (ந-கி.)

அறந்தாங்கி தாலுக்காவில் ஸனாதன தர்ம பிரசாரம்.

ஷை தாலுக்காவில் உள்ள பரமந்தூர் ஆதிகேசவப் பெருமாள் சன்னிதிவாசலில் ஓர் பொது கூட்டம் நடைபெற்றது. முதலில் P. V. ஸ்ரீனிவாஸபட்டாசாரியார் கடவுள் வணக்கம் செய்தார். அவ்வூர் மிருசுதாரரான ஸ்ரீமான் T. S. ராஜமய்யங்காரவர்கள் தலைமை வஹித்து பேசுகையில் ஸனாதன தர்ம சபை நோக்கங்கள் நம்மதத்தின் மேன்மை முதலியன எடுத்து கூறினார்கள். பிறகு சிதம்பரம் A. V. செளரிராஜபட்டாசாரியாரவர்கள். அ. வர்ணாஸ்ரம ஸ்வாராஜ்ய சங்கம் கிளை ஸ்தாபனம் அறந்தாங்கி தாலுக்காவில் நிறுவ வேண்டிய முக்யதைபற்றியும். நம்மதத்திற்கும் ஆலயங்களுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை பற்றியும் வெகுவாய் ஸம்ஸ்கிருதத்திலும், எடுத்துரைத்தார்கள் ஒரு வாரத்திற்குள் ஷை சங்கம் ஸ்தாபிக்கவேண்டுமென்று கொண்டு வந்த தீர்மானம் கரகோஷத்தினியே நிறைவேறிற்று. தலைவர் பின்னுரைக்குபின்பு. ஸ்ரீராமஸ்வாமி பிள்ளை வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது. ஒ-கி

|| ஸ்ரீ: ||

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீசங்கரர்சாரிய ஸ்வாமிகள் அவர்கள்ஸ்ரீமடம் சிஷ்யகோடிகளுக்கு செய்த

ஆக்ஞா ஸ்ரீமுகம்

பழநி ப்டும்மஸ்ரீ சுப்பிரமணிய சிவன் அவர்களால்
ஆடக க்ஷேத்திரமென்னும்
திருவாரூர் ஸ்ரீ தியகராஜ ஸ்வாமிக்கு

121 குடம் கெங்கா தீர்த்தம் தருவித்து

விக்கிரம-ஹு ஆனி-மீ 22உ வெள்ளிக்கிழமை அமாவாஸ்யை
திருவாதிரை நக்ஷத்திரங்கூடிய சுபதினம்

5—7—40 முதல் ஆனி-மீ 32உ (15—7—40) ஸோமவாரம் முடிய 11 தினமும் 121 வைதீகர்களைக்கொண்டு ப்ரதிதினமும் ஒவ்வொருவரையும் 11 தடவை மஹன்யாஸத்துடன் ஸ்ரீமஹாருத்ரபாராயணம் செய்வித்து ஆனி-மீ 32உ (15—7—40) சோமவாரத்தன்று இரவு தக்ஷிணயன புண்யகாலத்தில் ஷை 121குடம்கெங்காதீர்த்தத்தையும் அபிஷேகம் செய்விப்பதென்றும், ஸ்ரீ வன்மீகநாத ஸ்வாமி, ஸ்ரீ கமலாம்பாள், ஸ்ரீ நீலோத்பலாம்பாள், கணபதி, சுப்ரமணியர் ஆகிய ஸ்வாமிகளுக்கும் முறையே ஜபம் செய்வித்து கெங்காதீர்த்த அபிஷேகமும், இந்த 12-தினங்களுக்கு அன்னதான தர்மமும் செய்விப்பதென்று தீர்மானம் செய்திருக்கிறபடியால், ஸ்ரீமடம் சிஷ்யகோடிகளில், ருத்ரபாராயணம் செய்யக்கூடியவர்கள் அவரவர்களால் முடிந்தவரை ஆத்மார்த்தமாக வைதீக காரியங்களை செய்துகொடுக்க வேண்டியது.

அன்னதானம் செய்துவைக்கக்கூடிய பிரமுகர்கள் 12-தினங்களில் தங்களால் எவ்வளவு தினங்களில், தானே இருந்து நிர்வகித்து நடத்திக்கொடுக்கக் கூடுமோ அவ்வளவு தினங்கள் தங்கள் சக்திக்கு தக்கவாறு நடத்திவைக்க வேண்டியது.

இவ்வித உத்தம கைங்கரியங்களை நடத்திக்கொடுத்து ஸ்ரீ தியாகராஜ பெருமான் கிருபையால் இகபர ஸாதனங்களை அடையவேண்டியது.

முகாம் அரசவனங்கோடு,
பிரமாதிஹு பங்குனிமீ 18உ

நாராயண ஸ்மிருதி:

NB:—பொருளுதவி செய்பவர்கள் கீழ்க்கண்ட விலாஸத்துக்கு அனுப்பும்படி கோரப்படுகிறது. பழனி சிவன், No. 9 சன்னதித்தெரு, திருவாரூர், S. I. Ry.

மதிப்புரை.

பாகதிட்ட போதினி

(சமையலுக்கு உதவியான புஸ்தகம்)

மேற்கண்ட பெயருள்ள புஸ்தகமொன்று வரப்பெற்றோம். ஹிந்துக்களின் ஸித்தாந்தப்படி, எல்லா விஷயங்களும் மத ஸம்பந்தப் பட்டவைகளாகவே இருக்க வேண்டியது. அதன்படி சமையல் முறைகளும் சாஸ்திர ஸம்மந்த முள்ளவைகளே

நமது கிரஹங்களில் செய்யப்படும் எந்த சமையலும் பகவானை யுத்தேசித்தே செய்யப்படவேண்டும். பகவானுக்கு நிவேதனமாகாத வஸ்துவை உண்பவன் திருடனுக்கு ஒப்பாவான் என்று கீதையே கூறுகிறது. ஆகவே நம்கிருஹங்களில் செய்யப்படும் எந்த உணவுகளும் பகவானுக்காகச் செய்யப் படுகின்றவென்கிற உணர்ச்சி யேற்படும்போது அவ்வுணவு பகவான் ருசிக்கும் வண்ணம் சுசியாயும் ருசியாயுமிருக்க வேண்டிய நிர்ப்பந்த மேற்படுகிறது.

மேலும் ஹிந்து மதமானது தேவகார்யம் பித்ருகார்யம் முதலிய அநேக விஷயங்களில் நாநாவித பக்ஷ்ய போஜ்யாதிகளுடன் அன்னதானம் செய்யும்படி விதிக்கிறது. இவ்வாறு பல வழிகளிலும் மத ஸம்பந்தம் பெற்ற சமையல் முறையை இக்காலத்தில் சாஸ்திர முறைப்படி செய்வது அரிதாகி வருகிறது. குலஸ்திரீகளும் சோம்பலால் இவைகளை அலக்ஷ்யம் செய்து மறந்து வருகின்றனர்.

முறைப்படி செய்யப்படாத உணவுகளால் வியாதிகளும் பலவாறுக ஏற்படுவதைப் பாக்கிறோம். ஆகவே சுத்தமான சமையல் முறைகளைப் போதிக்கும் இத்தகைய சிறந்த புஸ்தகங்கள் தோன்றுவது இச்சமயம் அவச்யமாகிறது. இப்புஸ்தகத்தின் முகவுரையில், பிரசுரகர்த்தாக்கள் கூறியுள்ள உயர்ந்த நோக்கங்களுடன் இப்புஸ்தம் எழுதப்பட்டிருப்பது உண்மையென்றே விளங்கும். இதை எழுதியவர் ஸ்ரீமான் என். கணேசன் என்றவர். இதில் ஏழு அத்யாயங்களில் சாப்பாட்டு திட்டவிபரம், சிற்றுண்டி திட்டவிபரம், தித்திப்பு பக்ஷணங்கள் தித்திப்பு சிற்றுண்டிகள் கார பக்ஷணங்கள் பொங்கல் வகைகள் போன்ற வெகு முக்யமான விஷயங்கள் சிக்னமான முறையில் தெளிவாயும் சிறுவர்கள் கூட எளிதில் அறிந்து கொள்ளும்படியும் கணக்கு விவரத்துடன் வெகு நன்றுக எழுதப் பட்டிருக்கின்றன இப் புஸ்தகம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியது அவசியம். ஆண் பெண் ஆகிய பள்ளிக்கூட பிள்ளைகளும் இதை அப்யஸிப்பது நலமாகையால் இது பள்ளிகூடங்களில் பாடப் புஸ்தகமாக அமைய அர்ஹதையுள்ள தென்றும் கூறுகிறோம். பெரிய எழுத்தில் நல்லகாகிதத்தில் வெகு ரமணீயமாக அச்சிடப் பட்டிருக்கிறது. இதன் விலை ரூ. 1—0—0 மஸாஸ் கம்பெனி ஸ்ரீ சக்ரபாணி கோவில் வடக்கு வீதி அல்லது ஸ்ரீ ஜனார்த்தன பிரஸ் கும்பகோணம் என்ற விலாஸத்தில் கிடைக்கும்.

கும்பகோணம்.

(3ம் பக்கம் தொடர்ச்சி)

முன்பாக கூட்டம்நடைபெற்றது பிராமண மஹாசபை காரியதரிசி, ஆஸ்திகதனவணிகர் ஸ்ரீ ரு. ம. ராமன் செட்டியார் அவர்கள் தலைமையில் சுமார் 500 ஜனங்களுக்கு மேலுள்ள கூட்டம் கூடியிந்தது. ஸ்ரீமான் ராவ்சாகிப் என். நடேச அய்யர் அவர்களுக்கு பிராமண மஹாசபை காரியதரிசி பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் வரவேற்பு பத்திரம் ஒன்று வாசித்தளித்தார். பிறகு ராவ்சாகிப் என். நடேசய்யர் என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார், டி. எஸ் ராமசாமி அய்யர், செல்லையா பிள்ளை, கதிரேசன் செட்டியார், டி. பி. ஜெகதீச அய்யர் ஆகியோர் ஆலயப்ரவேச விஷயமும், அவைகளை கண்டித்தும், மதங்களைதூஷித்து காட்டப்படும் சினிமாபடங்களை சென்ஸார் போர்ட்மூலம் கண்டித்தும் பேசினர்கள். சுமார் 10-30 மணிக்கு கூட்டம் ஜே என்ற சப்தத்துடன் முடிவு பெற்றது.

[6-ம் பக்கத் துடர்ச்சி.]

"சென்றவற்றையுன்னிக் கன்றுவது நன்றன்று" "போனது போகட்டும் மனமே இனியாகிலும் புத்தியாய்ப் பிழை தினமே" என்று பழமொழிகள் வழங்கிவருகின்றன. "ஒரு நூல் பிரசித்தி அடைவதற்குள்ள பெருங் குற்றம் அந்த நூலாசிரியன் உயிரோடிருப்பதே" என்று கூறுவது உண்டு. நமது பாஷா பாரத துரந்தரளித்த தமிழ் மஹாபாரதத்தால் தமிழ் நாடு அடையவேண்டிய பலன் பலவுள. அஃது அப்பயனைப் பெற்று இன்புறவேண்டுமாயின் அந்தப் பெருநூல் பத்து லட்சக்கணக்கில் பல இடங்களிலும் படிக்கப்படவேண்டும். அதற்குத் தகுந்த காரியத்தை நமது நாட்டு மடாதிபதிகளும் செல்வச் சீமான்களும் ஒன்று கூடித் தீர ஆராய்ந்து நிறைவேற்ற வேண்டும். சுருங்கக் கூறின் அந்தத் தமிழ் மஹாபாரதத்தைத் தமிழ் நாட்டுச் சொத்தாகச் செய்து கொள்ளவேண்டும் என்பதே அடியேனது கருத்தாகும். அவ்வாறு செய்வதுதான் ஆண்டவன் திருவடி நிழலில் அமர்ந்திருக்கும் நமது ஆசாரிய ஸ்வாமிகளுக்கும், அரசாங்கம் போலக் குடும்பத்தை நடத்தி இனி எவ்வாறு முன்போல வாழ்க்கையை நடத்துவது என்று கவலையுடன் இருக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் முறையே சாந்தியையும் ஆறுதலையும் அளிப்பதாகும். இங்கே அவர்களது பிரிவுக்கு ஆற்றுது அடியேன் மனத்தே தோன்றிய சில வரிகளைத் தருகிறேன்.

மணலூர் வீர வல்லியேனும்
வளஞ்சார் குடியின் மணிவிளக்காய்
குணமா மலையாய்த் தமிழ்க்குருவாய்க்
கோடையிற்றருவாய்த் தோன்றியற
டீணமே கமழ்மா பாரதத்தை
வண்மைத் தமிழில் வகுத்தனையேவ்
வணரீ யெங்க டமைப்பிரிந்தாய்
வந்தா ளிராமானுஜ மறையோய்,
மாழைப் பதித்த மணியிரா மானுஜரீ
ஏழை யெமைப்பிரிந்தா யென்றாலும்—வாழ
அருள்சுரக்குங் கண்ண னடிநிழற்கீ ழென்றும்
தெருள்வடிவே கொண்டு திகழ்.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.